TAMIL NADU LEGISLAT[...]
21 JUL 19[...]
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1973 மார்ச் 10

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

அறிவியல், தொழில்நுட்ப ஆராய்ச்சிகளுக்கான குழு

*311 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறிவியல், தொழில்நுட்ப ஆராய்ச்சிகளை வளர்ப்பதற்கான திட்டங்களை உருவாக்க மாநில அமைப்பு ஒன்றினை அமைத்துச் செயல்பட மத்திய அரசு கூறியுள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. பாந்தாமன்: தலைவர் அவர்களே, மத்திய அரசின் பரிந்துரையின் பேரில் இப்படிப்பட்ட அமைப்பு ஒன்று அமைக்கப்படவில்லை என்றாலும், மாநில அரசே இதற்காக ஒரு குழுவை அமைத்து இதுகுறித்து ஆராய முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாநில அரசின் சார்பாகத் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஒன்றை அமைத்து, அதன் சார்பாக ஆராய்ச்சிகள் நடத்தலாம் என்ற எண்ணத்தோடு ஒரு செயற்குறிப்பு மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசினிடத்திலிருந்தும் பல்கலைக் கழக மானியக் குழுவினிடத்திலிருந்தும்

அதற்கான அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அனுமதி வந்த பிறகு தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டதற்குப் பிறகு, அதிலே இப்படிப்பட்ட ஆராய்ச்சிப் பிரிவுகளெல்லாம் ஏற்படும்.

திரு. நா. வீராசாமி : தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஒன்று ஆரம்பிப்பதற்கான செயற்குறிப்பு மத்திய அரசுக்கு எப்பொழுது அனுப்பப்பட்டிருக்கிறது? ஏன் இதுவரையில் அனுமதி வரவில்லை? அதை மத்திய அரசினிடத்தில் வலியுறுத்தி, தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தை உடனடியாக ஆரம்பிப்பதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது அனுப்பப்பட்ட குறிப்பிட்ட நாள் விவரம் இல்லை. ஆனால், இரண்டு மூன்று ஆண்டுக் காலத்திற்கு முன்னால் இங்குள்ள குழுவின் மூலமாகத் தீர்மானம் நிறைவேற்றி அது மத்திய அரசுக்கும் பல்கலைக் கழக மானியக் குழுவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. அது பல்கலைக் கழகத்தினுடையவும் மத்திய அரசினுடையவும் பரிசிலனையில் இருந்து வருகிறது. தொடர்ந்து இந்த அரசு வலியுறுத்தி வருகிறது. அண்மையில் நான் டில்லி சென்றிருந்தபோது, கல்வி அமைச்சர்கள் மாநாட்டின்போது மத்திய கல்வி அமைச்சரிடம் இதுபற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இதுபற்றிய அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. எ. வகாப் : இந்தத் தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திற்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி கேட்பதாகக் கூறினார்கள். இதற்கு வேண்டிய மொத்தச் செலவைத் தமிழக அரசு செய்கிறதா? அல்லது, மத்திய அரசு செய்கிறதா , அல்லது இரண்டு பேரும் பங்கெடுத்துச் செய்யப்படும் பல்கலைக் கழகமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லையென்றாலும் தெரிவிக்கின்றேன். மாநில அரசு ஓரளவு பங்குகளை ஏற்றுக்கொள்ளும். பல்கலைக் கழக மானியக் குழு சில பல வகைகளுக்கென்று நிதி ஒதுக்கீடு செய்யும். அந்த ஒதுக்கீட்டினைப் பெற வசதி ஏற்படும். மற்றச் செலவுகளையெல்லாம் மாநில அரசுதான் ஏற்றுக்கொள்ள வேண்டிவரும்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : அப்படித் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஏற்படுகின்ற வாய்ப்புக் கிட்டுமானால் அது இந்த மாநிலத்தில் எந்த இடத்தில் அமைக்கப்படும் ?

1976 மார்ச் 10]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படி ஏற்பட்டால் சென்னையில்தான் அதற்கான எல்லா வசதிகளும் இருக்கின்றன. பல்கலைக் கழகத்தின் தலைமையிடம் சென்னையில்தான் அமையும்.

தஞ்சை மாவட்டத்திற்குப் பொறியியல் கல்லூரி

*312 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் ஓர் பொறியியல் கல்லூரி ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

அம்பாசமுத்திரம் பேரூராட்சி மன்றம்

*313 வினு—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் பேரூராட்சி மன்றத்தின் தலைவர், 26—9—1970 தேதியில் பெண் உறுப்பினர் தேர்தல் நடத்தி, பெண் உறுப்பினரைத் தேர்ந்து எடுத்தது செல்லாது என கோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் 26—9—1970-ல் நடந்த பெண் உறுப்பினர் தேர்தல் கூட்டத்தில் திருமதி சண்முக வடிவு அம்மாள், 9 ஓட்டு களும், மற்றொருவரான திருமதி மாகதம்மாள் 7 ஓட்டுக்களும் பெற்றிருப் பதாகவும், ஆகவே, திருமதி சண்முகவடிவு அம்மாள் தேர்ந்தெடுக்கப் பட்டதாக, பேரூராட்சியின் தலைவர் அறிவிக்க, இத்தேர்தலை எதிர்த்துப் பேரூராட்சியின் உபதலைவரும், மற்றும் எழு உறுப்பினர்களும் வழக்குப் போட்டார்கள். திருமதி சண்முகவடிவு அம்மாளும், திருமதி மரகதம்மாளும், முறையே எட்டு ஓட்டுக்கள் பெற்றிருப்பதால் திருமதி சண்முகவடிவு அம்மாளைத் தேர்ந்தெடுத்தது செல்லாது எனவும் சட்ட திட்டங்களுக்குட் பட்டுப் புதிய பெண் உறுப்பினர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனவும் அம்பா சமுத்திரம் மாவட்ட முன்சீப் கோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS